# தாயுமானவர்

- திருச்சிராப்பள்ளியை ஆண்ட விஜயரங்க சொக்கநாத நாயக்கரிடம் கேடிலியப்பபிள்ளை என்பவர் கணக்காளராக பணிபுரிந்தார்.
- இவரின் மனைவி கெஜவல்லி அம்மையார் இவர்களுக்கு குழந்தை வேண்டி திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை தாயுமானவர் கோவில் அருளால் தற்போது வேதாரண்யம் என்று அழைக்கப்படும் திருமறைக்காடு என்னும் ஊரில் தாயுமானவர் பிறந்தார்
- தாயுமானவர் அருளால் பிறந்ததால் இவருக்கு தாயுமானவர் என பெயர் வைத்தனர்.
- இவரது மனைவியின் பெயர் மட்டுவார் குழலி.
- இவர் இவரது தந்தைக்கு பிறகு விஜயரங்க சொக்கநாத நாயக்கரிடம் கணக்காளராக பணிபுரிந்தார்.
- அரசரின் மறைவுக்கு பிறகு அரசரின் மனைவி இராணி மீனாட்சி (திருச்சிராப்பள்ளியின் கடைசி அரசி) அவர்களிடமும் கணக்காளராக பணிபுரிந்தார்.
- இவர் இல்வாழ்க்கையிலிருந்து திருமூலர் மரபில் வந்த மௌனகுரு என்பவரின் அருளால் துறவறம் பூண்டு சமய பணியாற்றினார்.
- கி.பி 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் சைவ (சமரச) சித்தாந்த கருத்துகளைக் கொண்டிருந்தார்.
- இவர் எழுதிய பாடல்கள் தமிழ் மொழியின் உபநிடதம் என்று அழைக்கப்படுகிறது.
- இவர் பாடல்களுக்கு 'தாயுமானவ சுவாமிகள் திருப்பாடல் திரட்டு' என்று பெயர்.

- பராபர கண்ணி, எந்நாட் கண்ணி, கிளிக்கண்ணி, ஆனந்தக் களிப்பு, ஆகார புவனம் போன்றன இவர்தம் பாடற் தலைப்புகளில் சிலவாகும்.
- இவர் இறுதியில் இராமநாதபுரத்தில் உள்ள இலட்சுமிபுரத்தில் முக்தி அடைந்தார்.
- இவரின் கருத்துக்கள் வீண் சடங்குகளைத் தவிர்த்து உயிர், உடல், மனம், உலகம் இறைவனை அடைய வேண்டும் என்றார்.

" எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"
"நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சன நீர் பூசைகொள்ள வாராய்ப் பராபரமே"

------****-----****----